# தம்பிலுவில் கண்ணகி அம்மன் பாடல்கள்





ஆக்கம் : இரா தெய்வராஜன்
திருக்கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் ஸ்ரீ சாய்ராம்

# கண்ணகி அம்மன் காவியம்

01. அரனாரின் மூத்த மகன் அத்திமுகன் பாதம்
சரணடைந்து கண்ணகியின் கதை பாடவந்தோம்
குறைஏதும் சேராமல் காத்தருள வேண்டும்
நிறைவான பாடலென்று ஊர் நினைக்க வேண்டும்.

02. ஆதிஷக்தி அபிராமி கயிலையிலே பரமனிடம்
சேதி ஒன்று சொன்னாள் அன்று
தமிழ் மன்னன் பாண்டியனின் நெற்றிக் கண் நீங்கிடவே
விதி செய்வேன் விடைதா என்று

03. அரசாட்சி பிழைத்தோர்க்கு அறம் கூற்றமாகும்
உரைசான்ற பத்தினியை ஊர்புகழ்ந்து பாடும்
ஊழ்வினைகள் என்றால் அவை தேடியே சேரும்
உற்றதுணை நானென்று வழி அனுப்பி வைத்தான்.

04. பரராசர் முனிவர் மகள் நாகமங்கலையுருவில்
பராசக்தி சென்றாள் அங்கே
நெற்றியிலே கண்ணுள்ள மாமாறன் மாமரத்தில்
நற்கனியாய் உதித்தாள் அங்கே

05. அழகான மாங்கனியை மன்னவன் பறித்தான்
அதில் வடிந்த பால் தெறித்து நெற்றி விழி இழந்தான்
அதிசய மாங்கனியதனை பேளையினுள் வைத்தான்
ஐந்தாம் நாள் பெண்சிசுவை அதனுள்ளே கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கணிதர்களை வரவழைத்து ஜோதிடம் கணிக்கையிலே
கேடுவரும் என்றே சொன்னார்
தங்களுக்கும் நாட்டிற்கும் தொல்வினைகள் தேடிவரும்
இங்கிருத்தல் ஆகாதென்றார்.

07. வேதியர்கள் சொன்னபடிபேளையினுள் வைத்தே
ஏது உனக்கிசைந்த இடம் சென்று விடு என்றே
மாது உமைக் குழந்தையுனை மாறனும் எடுத்தே
தீது அறத்திரை கடலில் விட்டனரே அன்று

08. பெருவணிகர் மாநாகர் மாசாத்துவானுடனே
கடலோரம் நின்றார்களே
பொன் வண்ணப் பேழையொன்று கடலோரம்
மிதந்து வர மனம் மகிழ்ந்து பார்த்தார்களே

09. பெட்டகம் எனக் கென்று மாசாத்துவானும்
உள்ளபொருள் எனக் கென்று மாநாகரும் கூற
உள்ளிருந்த பெண் சிசுவை மகளாகப் பெற்றார்
இவள் எனக்கு மருமகள் தான் மைத்துனரும் சொன்னார்

10. நாளொரு வண்ணமான பருவமங்கை கண்ணகிக்கு
நல்லணிகள் பூட்ட நினைத்தான்
நாகமணி உள்ளீடாய் சிலம்பு தனைச் செய்வதற்கு
மீகாமன் துணையாய் வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கட்டு மரக் கப்பல்களைக் கச்சிதமாய்க் கட்டி
கடலோடி மீகாமன் நாகமலை சென்றான்
வெடியரசன் படைகளையும் வேரோடு வீழ்த்தி
கொடிய விஷப் பன்னகத்தின் தீவினிற்கே சென்றான்

12. நாகங்களைப் போற்றிப் பாடி மலரடியை வணங்கி நின்று
நாகமணி தாரும் என்றான்
சோழநாட்டுப் பெருவணிகன் மாநாகர் மகளுக்கிதை
வழங்குவதே நோக்கம் என்றான்.

13. செம்பாம்பு அரிதான செம்மணியை ஈன
கரும் பாம்பு மாநாகம் நாகமணி தந்தார்
செம்பட்டில் சேர்த்த மணி அத்தனையும் சுற்றி
கும்பிட்டே பக்குவமாய் அதை எடுத்துச் சென்றான்.

14. மீகாமன் திறத்தாலே மணி பெற்ற மாநாகர்
மகளுக்குச் சிலம்பை ஈந்தார்
மாசாத்துவானின் மகன் கோவலர்க்குத் தன்மகளை
மங்களமாய் வதுவை செய்தார்

15. வாழ் பொழுது ஊழ் வினையால் மனம் மாறிச் சென்றான்
சோழன் முன் ஆடுகின்ற மாதவியில் வீழ்ந்தான்
ஆயிரத்தெண் களஞ்சிபொன் நாளொன்றுக் கீந்தான்
கையிலுள்ள பொருளனைத்தும் கோவலன் இழந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கானல்வரி பாடியே மாதவியை விட்ட கன்று
கண்ணகியை நாடிச் சென்றான்
அன்பான கோவலனின் கொள்கையினைத் தான் மறந்து
இன்பமுடன் சேர்ந்தே வாழ்ந்தாள்

17. வாணிபத்தை தொடங்கிடவே முதல் இல்லை என்றே
வண்ணமணிச் சிலம்பை விற்க கண்ணகியும் சொன்னாள்
மாமதுரை சென்று விற்க கோவலனும் சொன்னான்
இனி என்றும் பிரியாமல் வாழ்ந்திடுவோம் என்றான்

18. காவிரிப் பூம்பட்டினமாம் நகரை விட்டு இருவருமே
காட்டுவழி சென்றார்களே
கடும் வனத்தில் வழிகாட்டி மதுரைவரை செல்வதற்கு
கவுந்தி அம்மை துணை புரிந்தாரே

19. அழகர் மலை தாண்டியே வைகை நதி ஓரம்
ஆயர்கள் வாழுமிடம் அவர்கள் வந்து சேர்ந்தார்
இடைச்சேரித் தலைவியாம் மாதரியும் வந்தாள்
இஷ்டமுடன் சேரியிலே தங்க இடம் தந்தார்

20. அடைக்கலமாய் கண்ணகியை அவர்களுடன் விட்டு விட்டு
அவசரமாய் கோவலன் சென்றான்
நாகமணிச் சிலம்புதன்னை நல்விலைக்கு விற்றுவர
நகர்த் தெருவில் நடந்தே சென்றான்



-04-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. நெடு வீதி மதுரையிலே விலை கூறிச் சென்றான்
நேர் கொண்ட தட்டானும் சிலம்பதனைக் கண்டான்
நிகரில்லா சிலம்புதனை பாண்டியனெ கொள்வான்
இதனை விற்று நான் தருவேன் காத்திருக்கச் சொன்னான்.

22. பாண்டிமா தேவியரின் காற்சிலம்பை தொலைத்ததற்கு
மாற்றீடு என்று நினைத்தான்.
மனசாட்சி இல்லாத 'வஞ்சி' என்ற கம்மாளன்
மாறனிடம் பொய்மை உரைத்தான்

23. கோப் பெருந் தேவியரின் சிலம்பு கொள் கள்வன்
கோவலனும் பிடிப்பட்டான் சிலம்பு இதோ என்றான்
பாண்டிமா தேவியோ இதுவல்ல என்றாள்
மனைவி சொல் கேளாது பத்தனிடம் கேட்டான்

24. மாதேவி சிலம்பிதுவே என்று பத்தன் வாதிடவே
வாரணத்தால் கொல்ல நினைத்தான்
வாரணமும் கொல்லாமல் பின் வாங்கி சென்றிடவே
மழுவதனால் பிளப்போம் என்றான்

25. மன்னவனை மழுவரசன் மாலகன் வணங்கி
என்ன பணி செய்வதற்கு எனை அழைத்தீர் என்றான்
மாளிகையில் சிலம்பு கவர் திருடனை பிடித்தோம்
மழுவதனால் அவன் உடலை அறுத்துவிடு என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மாலகனும் மழுவோடு கொல்லுமிடம் சென்றதுமே
கோவலனைக் கண்டு சிலிர்த்தான்
அநியாயம் உமக்கு இது நடந்தவற்றை சொல்லுமென்று
கதை கேட்டு உளமே நொந்தான்

27. குற்றமற்ற உன்னுடலை பிளக்க மனம் இல்லை
உற்ற துணை என் மனைவி துர்நிமித்தம் சொன்னாள்
ஆராய்ந்து பாராமல் அரசாளும் மன்னன்
தீராத பெரும் பிழையைச் செய்து விட்டான் என்றார்.

28. எவருமே அறிந்திடாமல் நீ பிழைத்து ஓடுமென்று
மழுவரசன் பகர்ந்தானம்மா
மாலகனே பிழை செய்யாய் உன் குறையைத் திருத்திவிடு
பிளந்து விடு என்னை என்றான்

29. ஏவலாளன் என் மீது பிழை எதுவுமில்லை
பாவம் பழி எல்லாமே பாண்டியற்கு என்றே
கோவலனை பிளந்து இரு கூறுகளாய் ஆக்கி
உள்ளமது கலங்கியே மழுவரசன் சென்றான்

30. முத்துக்கள் சிதறிடவும் முந்தானை எரிந்திடவும்
தீக் கனவு கண்டாள் தேவி
சொத்தான நாகமணி தெறித்தெங்கும் பறந்து விழ
சொப்பனமும் கண்டாளம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. வல்லகணை பட்டுருவி மான் விழவும் கண்டேன்
நல்ல காற் சிலம்புகளும் பறிபோகக் கண்டேன்
மாங்கல்யம் கழுத்தை விட்டுத் தெறித்திடவும் கண்டேன்
என் கணவன் நிலை அறிய நான் மதுரை செல்வேன்.

32. ஒரு கையில் சிலம்பெடுத்து மறுகையில் குழை பிடித்து
பெருமதுரை சென்றாள் அம்மா
வீதியிலே நடவாமல் பறந்து சென்று பதட்டமுடன்
கொலை களத்துள் புகுந்தாள் அம்மா

33. மழுவாலே பிளவுபட்ட மணவாளன் உடலில்
விழுந்தழுது பரிதவித்து வீறு கொண்டு எழுந்தாள்
தெய்வமகள் கண்ணகி நான் இறைஞ்சுகிறேன் ஈசா
பொன் ஊசி நூலுடனே போட்டருள்க என்றாள்.

34. விண்ணதனை நோக்கி அவள் கைகளையே நீட்டிடவே
பொன் ஊசி பெற்றாளம்மா
ஊசியிலே நூல் கோர்த்து இரு கூறாய் ஆனவனை
மருங்கணைத்துச் சேர்த்தாள் அம்மா

35. கண் விழித்துக் கோவலரும் நடந்தகதை சொன்னார்
பாண்டியனைப் பழிவாங்கி மதுரையை எரிப்பாய்
சேரநாடு செங்குன்றம் தேடி நீ வந்தால்
ஈரேழு நாட்களிலே நான் வருவேன் என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. வாக்கினை கொடுத்தபடி கோவலனும் உயிரை விட
வெகுண்டெழுந்தாள் கண்ணகித் தாயார்
கருங்கூந்தல் விரித்த படி ஒருகையில் சிலம்பெடுத்து
கனல் பறக்கச் சென்றாள் அம்மா.

37. பல தடை கடந்து அரசவை நுழைந்தாள்
தட்டானின் சொற் கேட்கும் மன்னன் இவன் என்றாள்
தன் கணவன் கள்வனெனக் கொன்றவனைக் கண்டாள்
தார்ப்பரியம் காணாமதி கெட்டகவன் நீ என்றாள்.

38. அழிந்து விட எண்ணியே அவமதித்த செயல் சொல்லி
அறிந்த கதை சொல்லும் என்றான்
சோழ நாட்டின் பெருவணிகன் கோவலனே என் கணவன்
கொலையுண்ட செயலைக் சொன்னாள்

39. நாகமணி உள்ளீடாய் உள்ளதென் சிலம்பை
நல் விலையில் விற்கவென்று என் கணவர் வந்தார்
கள்வனென்று பழி சுமத்தி கொல்வதென்ன நீதி
கொலைகாரன் கொடுங்கோலன் நீதானே என்றாள்

40. கோப்பெருந்தேவியரின் சிலம்பிலுள்ள உள்ளீடு
வெண் தரளம் என்றே சொன்னான்
கள்வனென்று கணவனிடம் கவர்தெடுத்த காற் சிலம்பை
களரியிலே காட்டும் என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. நின் சிலம்பு என்றாலே உன் சொல்லை கேட்கும்
அழைத்து விடு என்றே சபையினரும் சொன்னார்
கண்ணகியின் குரல் கேட்டு ஏழு தளம் இறங்கி
கையினில் தாவிய தன் காற்சிலம்பைக் கண்டாள்.

42. அருகிருந்த மணித் தூணில் சிலம்பதனை அடித்திடவே
அது வெடித்துச் சிதறியதன்று
உள்ளிருந்த நாகமணி மன்னவனின் முகத்தில் விழ
உணர்ந்து உயிர் துறந்தான் அன்று

43. வெண் கொற்றக் குடை சரிந்து பாண்டியனும் வீழ்ந்தான்
பாண்டிமா தேவியரும் உடனுயிர் துறந்தாள்
கண்ணகியும் முலை திருகி மதுரை நகர் எரித்தாள்
கண்ணெதிரில் தட்டானைச் சுட்டெரித்துச் சென்றாள்.

44. இடைச் சேரி சென்றவளை ஆச்சியர்கள் கூடி நின்று
கொடுஞ்சினத்தை தணித்தார்களே
வேந்தனையும் கூடலையும் சுட்டெரித்த கொங்கைதனில்
வெண்ணெய்தனை வைத்தார்களே

45. ஆச்சியரின் குரவை தனை கேட்டு மனம் குளிர்ந்தாள்
ஏழிரண்டு நாட்களிலே சேரநாடு சேர்ந்தாள்
செங்குன்றம் தனில் நின்ற புன்னையடி நின்றாள்
சொன்னபடி கணவனுடன் வானுலகம் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. பொற்தேரில் கண்ணகியும் கோவலரும் சென்ற கதை
குறவர் சொல்லக் கேட்டான் சேரன்
பத்தினியாம் கண்ணகியை பாரறியச் செய்வதற்கு
பல வழிகள் கண்டான் வேந்தன்

47. பத்தினித்தாய் தெய்வமென்று கோட்டமொன்றமைத்தான்
இமயத்தில் கல்லெடுத்து அழகு சிலை வைத்தான்
பாரிலுள்ள அரசர்களை அழைத்துக் கதை சொன்னான்
கண்ணகியைத் தெய்வமென கைதொழவும் வைத்தான்

48. சேரன் செங்குட்டுவனின் காலத்தே இலங்கையிலே
கஜபாகு ஆட்சி புரிந்தான்
கண்ணகியின் கற்சிலையைத் தன்னுடனே கொண்டு சென்று
இடர்களைந்து வெற்றியும் கண்டான்

49. வைகாசி திங்களிரே நான் வருவேன் என்றாய்
வையகத்தை வாழ வைக்கும் தெய்வமுனை கண்டோம்
வற்றாப்பளைக் கண்ணகியாய் கீழிறங்கி வந்து
தம்பிலுவில் வரை உந்தன் புகழ் பாடுதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கண்ணகி அம்மன் எங்கள் குல தெய்வம்

கண்ணகி அம்மன் எங்கள் குலதெய்வம்
காத்திடுவாள் எம்மை அவள் இது திண்ணம்

ஆண்டிற்கு ஒரு தடவை காத்திருப்போம் - அங்கு
அவள் முக தரிசனத்தைப் பார்த்திருப்போம்

(கண்ணகி ...)

மனச் சுமை இறக்கி வைக்கும் சுமை தாங்கி
மகிழ்ச்சியை வரவழைக்கும் தேமாங்கனி.....

மதுரையைச் சுட்டெரித்த தர்ம பத்தினி
மனங்குளிர்ந்தால் துன்பம் இல்லை இனி

(கண்ணகி.)

அன்புக்கு அடிபணிந்தே இருந்தவள் தான்
ஆசைக்கு வரம்புவைத்தே வாழ்ந்தவள் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரநீதி பொறுத்திடாத அன்னை துர்க்கை தான்

ஓங்காரி கண்ணகையாள் ஆதி ஷக்திதான் ....

(கண்ணகி..)

குழந்தை வரம் தருபவளும் கருமாரிதான்

இழந்தவற்றை சேர வைக்கும் முத்து மாரிதான்

இமைப்பொழுதே இடர்களையும் ஈஸ்வரிதான்

இஸ்ரமுடன் வரம் கொடுக்கும் பத்ர காளிதான்

(கண்ணகி.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பத்தினித்தாய்

பத்தினித்தாய் அம்மனே
பார்புகழும் தெய்வமே
தம்பிலுவில் தேடிவந்த கண்ணகித்தாயே

ஆலைமரச் சோலையில் அமர்ந்திருக்கும் அன்னையே
ஆதிபராசக்தியென வந்தவள் நீயே

மூன்று வேந்தர் தேசம் வாழ்ந்த அன்னை சக்தி நீயே
தமிழ் ஊர்கள் தோறும் வாழும் எங்கள் காவல் தெய்வம்
மூன்று வேந்தர் தேசம் வாழ்ந்த அன்னை சக்தி நீயே

அரசியல் பிழைத்தவர்க்கு அறமே கூற்றாம்
ஊரைசால் பத்தினியை ஊர்கள் போற்றுமாம்
ஊழ்வினைகள் எவெரென்றாலும் புகுந்து ஊட்டுமாம்
உண்மைகளை உரைக்க வந்தாள் கண்ணகித்தாயார்.

(பத்தினி தாய்.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி வளர் பிறையில் உன் முகம் காண்போம்

வரலாற்றுக் காவியங்கள் கேட்டு மகிழ்வோம்

ஏடகத்தில் ஏற்றி உம்மை ஊர்கள் சுற்றுவோம்

ஏழைகளின் வாழ்வுயர ... வழிகள் காணுவோம்.

(கண்ணகி.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகாசித் திங்கள்

வைகாசி திங்களிலே அம்மன் கோவில் திறந்தம்மா
வையகத்தில் எங்களூரே சிறந்ததம்மா

ஊர்க்கட்டுப்பாடுகளால் உள்ளம் புனிதமாகுதம்மா
துர்க்குணங்கள் எம்மை விட்டு ஓடுதம்மா

(வைகாசித்...)

சாத்வீக உணவுகளாலும் சாந்தமான பண்புகளாலும்
ஆத்மீகம் தழைத்த ஊராய் மாறுதம்மா
பத்ததி விதிகள் பார்த்து பகலிரவாய் சடங்குகள் வைத்து
கப்புகனார் செய்யும் பூசை சிலிகுதம்மா

கல்யாணக் கால் நாட்டி கண்ணகியாய் அலங்கரித்து
ஏடகத்தில் ஏற்றி வைத்தே பவனிவரும்
தோரணங்கள் பளபளக்க குரவை ஒலிவான் பிளக்க
வரிசையிலே நிறைகுடங்கள் கண் கவரும்
வேப்பிலையும் மாவிலையும் சேர்த்தமைத்த தோரணங்கள்
ஊரே மணப்பந்தல் எனக் காட்சி தரும்

(வைகாசி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அழகான தம்பிலுவில்

அழகான தம்பிலுவில் பதிவாழும் பத்தினியாள்

கண்ணகியின் புகழ்பாடுவோம்

அகிலாண்ட ஈஸ்லரியாய் அன்னை சிவகாமி என

- வாழுகின்ற உமை நாடுவோம்

மூவேந்தர் நாடுகளில் நீ வாழ்ந்து உயர்ந்தாலும்

தெய்வமென எமை நாடினாய்

கிழக்கிலக்கைத் தமிழகத்தில் அமர்ந்திருந்து ஊர் தோறும்

மக்கள் துயர் நீ தாங்கினாய்

உணவு உடை கல்வி என ஒரு குறையுமில்லாமல்

உற்ற துணை நீ ஆகினாய்

நிரந்தரமாய் உறைவிடமும் நிம்மதியும்தந்துதவும்

நேசமிகு தாயாகினாய்

கண்ணகியாய் வந்துதித்த கருமாரியே

கவலைகளை மாற்றிவிடு திரிசூலியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரச்சட்டியுடன் நேர்த்தியும் முடிப்பதற்கு

- நிரையாக வந்தோமம்மா

கமுகமரப் பாளையுடன் அடையாளமும் வைத்து

- மடைப்பெட்டி தந்தோமம்மா

வற்றாப்பளைக் கண்ணகியும் நீதானம்மா

வற்றாத கருணை வடிவானாயம்மா

(அழகான தம்பிலுவில்)

தாயே என் மணிக்கதவம் திறந்து பின்சாத்தும் வரை

தவ வாழ்வு என்போமம்மா

கடல் கடந்தும் உன் முகத்தை பார்ப்பதற்கு

ஓடிவந்தோம் திருவருளைத் தாரும் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணி காமாட்சி ஓங்காரியே
கற்பகமே மீனாட்சி மகமாயியே

துணையாக நீ இருந்து துயர் தீர்க்க வந்து விடு
கண்ணகியே எம் தெய்வமே

இணையில்லா நின்கருணை என்றென்றும் நாம் வேண்டி
வந்தோமே மாகாளியே

அகிலாண்ட நாயகியே ஜெகதீஸ்வரி
அருள்வாயே அங்காள பரமேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஆயிரம் கண்ணுடையாள்

ஆயிரம் கண்ணுடையாள் அன்னையே வாருமம்மா
தாயாக எங்களை நீ காத்திடம்மா

நோய் நொடி இல்லாத நல்வாழ்வு தாருமம்மா
தூயவராய் வாழ வழி காட்டுமம்மா
(ஆயிரம்)

தீயதை விலக்கி எம்முள் நல்லதைச் சேர்த்திடம்மா
மாயவன் சோதரியே சக்தி அம்மா
சீர் மிகு தம்பிலுவில் சிறந்த நல்லூரில் உறை
சிலம்புடை பத்தினியே காளியம்மா

அறியாது செய்த பிழை பொறுத்தெம்மைத் திருத்திடம்மா
அன்னையே அடிபணிந்தோம் மாரியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னையேய துணை எனவே நம்பியே வந்த எம்மை

உதறுதல் முறையோ சொல் பேச்சியம்மா

உன்னை அன்று வேறு தெய்வம் உலகினில் - இல்லையம்மா

அன்பு வைத்து அருள்புரி அபிராமி அம்மா

வாழ்வாங்கு வாழும் வழி சொல்லுமம்மா ஈஸ்வரியே

வழக்குரை பத்தினியே வாருமம்மா

(ஆயிரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பொறுமைக்கு இலக்கணம்

பொறுமைக்கு இலக்கணம் இவளே – பின்பு
பொங்கி எழுந்ததும் இவளே
பொறுமைக்கு இலக்கணம் இவளே – பின்பு
பொங்கி எழுந்ததும் இவளே
வழுதியின் அரசவை தனிலே – நின்று
வழக்குரை செய்தவள் இவளே (பொறுமை)
அம்மன் புகழ் தினம் பாடுவோம் - அன்னை
அபிராமியின் அருள் தினம் நாடுவோம்

மாங்கனியாக மாமதுரைக்கு வந்தாய்
மாறனின் நெற்றி மலர்க் கண்ணைப் பறித்தாய்
மழலையின் வடிவாய் சோழ நாட்டினை அடைந்தாய்
மாநாகர் மகளாய் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தாய்

மங்கைப் பருவத்திலே நீ மணம் முடித்தாய்
மாசாத்துவன் மகனைக் கைப்பிடித்தாய்
கண்பட்டதால் அவன் பிரிந்தானம்மா – கைப்
பொன் தீர்ந்ததால் மீண்டும் சேர்ந்தானம்மா
(பொறுமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலனோடு பாண்டி நாட்டிற்கு வந்தாய்
விதிவலிதாகி அவன் மாறனால் மாண்டான்
கொடுஞ்சினங் கொண்டு அவையில் வழக்குரை செய்தாய்
நீதியை நாட்டி கூடல் நகரினை அழித்தாய்
சினம் தணியவில்லை சோகம் குறையவில்லை
தனம் அறுத்ததனால் வலி அடங்கவில்லை
செங்குட்டுவன் நாடு சென்றாயம்மா உன்
நாயகன் தேரில் பறந்தாயம்மா

(பொறுமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தாயே கண்ணகி

தாயே கண்ணகியே தம்பிலுவில் தெய்வமே
மாயோன் தங்கையே மதுரை மீனாட்சியே
வைகாசித் திங்களின் வளர்பிறை நாட்களில்
உன் வாசல் தேடிவந்தோம் சிலம்புடைச் செல்வியே

தேடிவரும் அடியவரின் குறைகள் தீர்க்கும் அன்னையே
நாடிவரும் தீவினையை மடியவைக்கும் தேவியே
ஆண்டாண்டு காலம் எம்மை அரவணைக்கும் அம்மனே
வேண்டாத தீவினையை சுட்டெரிக்கும் நீலியே

(தாயே கண்ணகி)

பொங்கல் வைத்துப் படைத்திடுவோம் எங்க முத்து மாரியே
எங்களை நீ காத்தருள்வாய் சங்கரனின் பாதியே

ஊர் சிறக்க வேண்டுமம்மா ஆயிரங்கண் தேவியே
உன்புகழைப் பாடவந்தோம் ஆதிபராஷக்தியே

(தாயே கண்ணகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ நாட்டு வணிகர்குல வாரிசாக வளர்ந்தாய்
கோவலனை மணந்தே மன மகிழ்வுடனே வாழ்ந்தாய் - அவன்
மாதாவியாய் வாழும் அந்த ஊர்வலி மேல் வீழ்தான்
ஈராண்டு காலமாக பொறுமையுடன் இருந்தாய்
(தாயே கண்ணகி)

கைப்பொருளை இழந்து மீண்ட கணவனையும் ஏற்றாய்
காற்சிலம்பை விற்றுவர மதுரை நகர் சென்றாய்
திருடன் என்று கொலையுண்ட கணவனையும் கண்டாய்
பழி சொன்ன பாண்டி நாட்டு மன்னனையும் மாய்த்தாய்
(தாயே கண்ணகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தமிபிலுவில் தேடிவந்த

தம்பிலுவில் தேடிவந்த கண்ணகைத் தாயாரே
தாரணியில் பத்தினியாய் தெய்வ மகள் நீரே
நம்ம ஊரைப் பக்குவமாய் காப்பவளும் நீரே
நாராயணன் தங்கை அம்மா ஈஸ்வரித்தாயாரே

எத்தனையே சோதனைகள் தேடிவந்ததே – அவை
அத்தனையும் எம்மை விட்டு ஓடிச் சென்றதே

அம்மன் துணை எங்கள் முன்னே வரும்
வரும் வரும் அருள் தானாய் வரும்

யுத்த நாளில் தட்டுக் கெட்டு ஓடித்திரிந்தோம் - நல்ல
நித்திரையும் இல்லாமலே ஊரில் அழைந்தோம்
புத்தி கெட்டு வேதனையில் ஏங்கித் தவித்தோம் - எதிர்
காலத்தையே சூனியமாய் எண்ணி இருந்தோம்

அத்தனையும் மாற்றி எம்மை வாழ வைத்த தெய்வம் - இந்த
தம்பிலுவில் வாழும் எங்கள் கண்ணகைத் தாயே
அம்மன் துணை எங்கள் முன்னே வரும்
வரும் வரும் அருள் தானாய் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கக்கடல் பொங்கி வந்து கொள்ளை கொண்டதே - எங்கள்
சொந்தங்களைச் செல்வங்களை வாரிச் சென்றதே

வெள்ளம் வந்து ஊரையெல்லாம் மூடிச் சென்றதே – எங்கள்
சொத்து சுகம் அத்தனையும் அள்ளிச் சென்றதே
அத்தனையும் மாற்றி எம்மை வாழ வைத்த தெய்வம் - இந்த

தம்பிலுவில் வாழும் எங்கள் கண்ணகைத் தாயே
அம்மன் துணை இங்கு முன்னே வரும்
வரும் வரும் அருள் தானாய் வரும்

(தம்பிலுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடல் வரிகள்** : இரா.தெய்வராஜன்

**பாடியவர்கள்** : தெய்வராஜன், சித்தீசன், தினேஷ்
சபேசன் (சுப்பர் ஸ்ரார்),
ஹேமசாயினி உஜேனித்தா



**இறுவெட்டு**

இசை : சதீஸ் (சென்னை)

ஒலிப்பதிவு : ராஜ்குமார் (திருக்கோவில்)

தயாரிப்பு : லோஜன் (RNCD Home)
தம்பிலுவில்

st.comm. Batti :0652227083

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org